
இயற்கை செய்தி
ஃபிளமிங்கோ(Flamingo)



# ஃபிளமிங்கோ(Flamingo):

ஃபிளமிங்கோ பறவையைத் தமிழில் “பூநாரை” அல்லது “செந்நாரை” என்று அழைக்கிறார்கள். இது நாரை குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பறவையாகும்.



இவை சிறு சிறு கூட்டங்களாகவோ பெருங் குழுக்களாகவோ வாழும்.



## வேறு பெயர்கள்:

- பூநாரை
- செந்நாரை
- பெரிய பூநாரை: (Greater Flamingo)
- கோணமூக்குப் பூநாரை
- செங்கால் நாரை
- பவளக்கால் நாரை






## சிறப்பு அம்சங்கள்:



- ❖ வளைந்து தடிமனாக இருக்கும் அதன் அகலமான அலகு இவற்றின் மிகவும் தனித்துவமான அம்சம் ஆகும்.
- ❖ பூநாரைகளின் கால்கள் மற்றும் அலகும் இளஞ்சிவப்பு நிறத்தில் காணப்படுகின்றன.
- ❖ ∴பிளமிங்கோக்கள் 20 முதல் 30 வயது வரை வாழ்கின்றன.
- ❖ 3.3 - 4.6 அடி உயரமும் 3.3 - 9 பவுண்டுகள் எடையும் கொண்டது.



- ❖ ∴பிளமிங்கோக்கள் மெல்லிய கால்கள், நீண்ட கழுத்து, மற்றும் பெரிய இறக்கைகளைக் கொண்டிருக்கும்.
- ❖ இவை பெரும்பாலும் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்.
- ❖ நோய் பரவலாக இருந்தாலும், புண்கள் பொதுவாக தானாகவே குணமடைகிறது. (நோய் எதிர்ப்பு சக்தி அதிகம்)





- பிளமிங்கோக்கள் தங்கள் இறகுகளை சுத்தம் செய்வதில் ஒரு நாளில் 15-30% செலவிடுகின்றன.
- ஒரு சிறப்பு சுரப்பியில் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் அவற்றின் அலகுகள் உதவியுடன் இறகுகள் மீது பரப்புகின்றன.





- பல்லாயிரம் பூநாரைகள் ஒன்றாக கூடி இருப்பது இவற்றின் தனித்தன்மை - இதுவே இவற்றுக்கு பாதுகாப்பும் அளிக்கின்றது.
- பூநாரைகள் உப்பு நீர் மற்றும் நன்னீர் வாழ்விடங்களில், குறிப்பாக கரையோரப் பகுதிகளில் வாழ்கின்றன
- இவை சத்தமிடுவதில்லை. ஆனாலும் சில சமயங்களில் வாத்துகள் போன்று ஒலி எழுப்பக்கூடியவை.





## பூநாரையின் வாழ்விடம்:


- பூநாரைகள் சேறு படிந்த கடற்கரை மேடுகளிலும், உப்புக் கலப்புள்ள அகன்ற நீர்த் தேக்கங்களிலும் ஆழம் இல்லாதக் குளங்களிலும் கூட்டம் கூட்டமாக வாழும் இயல்புடையவை.



- பூநாரைகள் இந்தியாவின் பல பகுதிகளில் இடம்பெயராமல் வாழ்பவை என்றாலும் சிறிதளவு உள்நாட்டுக்குள்ளேயே இடப்பெயர்வு செய்கின்றன.



- இடம்பெயர்வின் போது, பிளமிங்கோக்கள் ஒரு மணி நேரத்திற்கு 37 மைல்கள் வரை பறக்கிறது.
- 300 மைல்களுக்கு மேல் பயணம் செய்து தங்கள் புதிய வாழ்விடத்தை அடைவார்கள்.





## உணவுகள்:

- சிறு நண்டு, கூனிறால்கள், பூச்சிகள், புழுக்கள், நிலபுழுக்கள், நீர்த்தாவரங்களின் விதைகள், அழுகிப் படிந்த பொருட்கள் பூநாரையின் முக்கிய உணவுப் பொருள்களாகும்.





- அவைகளின் இறகுகளின் நிறம் அவைகளின் உணவின் விளைவாகும். அவற்றின் உணவில் உள்ள நிறமிகள் (கரோட்டினாய்டுகள் - Carotenoids) என அழைக்கப்படுகின்றன.

- இவைகள் ஃபிளமிங்கோ பறவைகளின் நிறங்களுக்கு காரணமாகின்றன





## பூநாரையின் உண்ணும் முறை:



- பூநாரைகள் எளிதில் நீந்தக் கூடியன.
- ஆழமற்ற நீரில் இறங்கி வரிசையாக நின்று, தலையை நீருக்குள் ஆழ்த்தித் தனக்கே உரிய விந்தையான மேல் அலகைத் தரையில் படும்படி கவிழ்த்து வைத்து முன்னே இழுத்துக் கொண்டு சேற்றைக் கலக்கிய வண்ணம் நடக்கும்.



- இந்நிலையில் மேல் அலகு கிண்ணம் போல் அமைந்து, சேற்று நீர் அதில் சேகரிக்கப்படுகிறது.
- சதைப் பற்றுள்ள நாக்கு இந்நீரினுள் ஒரு மத்துப் போல கடைந்தவாறு, புழு புச்சிகளை அலசும்.
- இதன் சீப்பு போன்ற அலகு, ஓரங்களில் உள்ள இடைவெளிகள் வழியே நீர் வெளியேறி பூச்சிகள் அலகிலேயே தங்கிவிடும்.
- இதன் அலகு ஒரு வடிகட்டி போல் செயல்படும்.





# பூநாரையின் கூடு:



- பூநாரைகள் கூடுகட்டி, முட்டையிட்டு குஞ்சு பொரிக்கின்றன.
- இவற்றின் கூடு சேற்று மண்ணைக் குவித்து ஏற்படுத்தப்படுகின்றது.
- பூநாரை ஈரமான களிமண்ணால் கூடு கட்டும். ஈரமான களிமண்ணைக் உயரமாகக் கூப்பி வைக்கப்பட்ட கிண்ணம்போல் இதன் கூடு இருக்கும்.




- சூரிய வெப்பத்தால் உலர்ந்து கெட்டியாக இதன் கூடு அடுப்பில் வைத்து சுட்டது போலவே நேர்த்தியாக இருக்கும்.
- இது சுமார் 30 செ.மீ உயரமிருக்கும். அவை மண்பானை போன்ற வடிவில் கூடுகளைக் கட்டும் வழக்கத்தைக் கொண்டுள்ளன.





# பூநாரையின் இனபெருக்க முறை:



- ❖ பிளமிங்கோக்கள் மண்ணால் ஆன கூட்டில் குஞ்சு பொரிக்கும்.
- ❖பூநாரைகள் ஒவ்வொரு ஆண்டும் ஒரு முட்டையை உற்பத்தி செய்கிறது.
- ❖ சுண்ணாம்பு-வெள்ளை நிறத்தில் முட்டையை இடுகின்றன.



- ❖ பூநாரை குஞ்சு பிறக்கும்போது ”வெள்ளை பஞ்சுபோன்ற பந்து” போல காணப்படும் என்று விவரிக்கப்படுகிறது.
- ❖ ஆரம்பத்தில் பெற்றோருடன் இருக்கும் குஞ்சுகள், பாதுகாப்பு மற்றும் சமூகமயமாக்கலுக்காகச் சில வாரங்களுக்குப் பிறகு குழுவாக ஒன்றுசேர்கின்றன.





❖ பிளமிங்கோக்கள் ஒரே ஒரு துணையுடன் வாழ்கிறது



❖ இனச்சேர்க்கை முடிந்து, கூட்டின் உச்சியிலுள்ள குழியில் சராசரியாக ஒரு முட்டையிடும்.

❖ முட்டையிட்டபின் ஆண், பெண் பூநாரைகள் இரண்டுமே ஒன்று மாற்றி ஒன்று அடை காக்கும், அடைகாக்கும் நாரை இதன்மேல் கால்களை மடக்கிக் கொண்டு தான் உட்கார்ந்து அடைகாக்கும்.



❖இருவரும் தங்கள் குஞ்சுக்கு கொழுப்புகள் மற்றும் புரதங்கள் நிறைந்த பால் போன்ற பொருளைக் கொண்டு உணவளிக்கிறன்றன.





# crop milk (குஞ்சு பறவையின் உணவு:



- புதிதாகப் பிறந்த குஞ்சுகளால் தங்களுக்குத் தாங்களே உணவு தேடிக் கொள்ள முடியாது, எனவே பெற்றோர்கள் இருவரும் நிறமிகள் நிறைந்த செந்நிற **"crop milk"**-ஐ (பயிர் பால்) குஞ்சுகளின் வாயில் கக்கிக் கொடுக்கின்றன.
- இந்த பால், புரதம் மற்றும் கொழுப்பு நிறைந்த ஒரு ஊட்டச்சத்து மிக்க திரவமாகும்.
- ஆண் மற்றும் பெண் ஃபிளமிங்கோக்களின் உணவுக் குழாயில் (Digestive Tract) உள்ள சிறப்பு சுரப்பிகள் மூலம் இந்த பால் உற்பத்தி செய்யப்படுகிறது.



- குஞ்சுகள் வளர வளர அவற்றின் அலகுகள் வளைந்து, சில வாரங்களில் தானாக உணவை உண்ணக் கற்றுக்கொள்கின்றன.
- பல மாதங்களுக்குப் பிறகு, கரோட்டினாய்டுகள் நிறைந்த உணவுகளை உட்கொண்டு, அவற்றை வளர்சிதை மாற்றம் செய்யும் போது அவற்றின் சிறகுகள் இளஞ்சிவப்பு நிறமாக மாறுகிறது.





# பூநாரையின் ஓய்வு நேரம்:



- பூநாரை பறவைகள் பெரும்பாலும் நீரில் நின்றபடி உறங்கும் தன்மை கொண்டவை
- அவைகள் ஓய்வெடுக்க விரும்பும்போது, பிளமிங்கோக்கள் ஒரு காலில் நிற்கின்றன.
- ஃபிளமிங்கோக்கள் ஒரு காலில் நின்று தலையை முதுகில் சாய்த்து தூங்கும். இந்த நிலை விசித்திரமாகத் தோன்றினாலும், ஃபிளமிங்கோக்களுக்கு இது மிகவும் சாதாரணமானது.



- வானிலை அனுமதித்தால், அவை இரண்டு முதல் மூன்று மணி நேரம் வரை தொடர்ந்து தூங்குகின்றன.
- ஃபிளமிங்கோக்கள் உணவு தேடி பெரும்பாலான நேரத்தை ஆழமற்ற நீரில் செலவிடுகின்றன.





# பூநாரையிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்:

- ஃபிளமிங்கோ பறவை எப்படி தன் உணவை தேடி, அரித்து சாப்பிடுகிறது போல நாமும் ஆவிக்குரிய உணவாகிய வேதத்தை தேடி ஆராய்ந்து படிக்க வேண்டும். (யோவான் 5:39 வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே.)

- ஃபிளமிங்கோ பறவைகள் எப்படி குறைந்த நேரம் உறங்கி அதிக நேரம் விழித்திருக்கிறது போல நாமும் நம்முடைய ஜெப வாழ்வில் விழித்திருந்து ஜெபிக்க வேண்டும். (மத்தேயு 26:41 நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்;)

- அது உண்ணும் உணவில் இருந்து எடுத்துக்கொள்ளும் சத்துகளை தன் நிறத்தின் மூலமாக வெளிப்படுத்துகிறது. அந்த படியே நாமும் படித்த சத்தியத்தை வாழ்க்கையில் கடைபிடித்து தேவனுக்காக பிரகாசிக்கிற பிள்ளைகளாக இருக்க வேண்டும்.(மத்தேயு 5:14 நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.)





- ∴பிளமிங்கோ ஆண் பறவையும், பெண் பறவையும் இணைந்து குஞ்சுகளை பாதுகாக்கிறது போல பெற்றோராகிய நாமும் நம் பிள்ளைகளை இணைந்து பாதுகாக்க வேண்டும். (எபேசியர் 6:4 பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக.)

- ∴பிளமிங்கோ குஞ்சுகளால் உணவை தேடி செல்ல முடியாத நேரத்தில் பெற்றோர் பறவைகள் அதற்கு உணவளிக்கிறது போல சிறு வயதில் நம் பிள்ளைகளால் தேவனை அறிந்து கொள்ள முடியாத நேரத்தில் பெற்றோராகிய நாமும் வேத பாடங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். (நீதிமொழிகள் 22:6 பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.)



- ∴பிளமிங்கோ பறவைகள் எப்படி கூட்டமாக வாழ்கிறது போல நாமும் அனைவரோடும் இணைந்து தேவ அன்பை வெளிப்படுத்தி அவருடைய நாமம் மகிமைக்காக வாழ வேண்டும். (ரோமர் 12:10 சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்.)

“நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.”

யோவான் 14:15



தேவன் படைத்த நோக்கத்தை ஃபிளமிங்கோ பறவை நிறைவேற்றுகிறது, நாமும் தேவன் நம்மை படைத்த நோக்கத்தை நிறைவேற்றுவோம்! அவருக்காக வாழ்வோம்! மாரநாதா! ஆமென்!